# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்

**Corona special project**

தரம் 5

## முதலாம் தவணை செயலட்டை -2020

# தமிழ் மொழி - 01

புள்ளிகள் -

*நேரம் : $1\frac{1}{2}$ மணித்தியாலம்*

*மாணவர் பெயர்:*.................................................................................

**01). அடைப்புக்குள் உள்ள சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. **"வன்மை"** என்பதன் ஒத்த சொல். ( மென்மை, தன்மை, கடினம் )
2. **"சினம்"** என்பதன் எதிர்ச்சொல். ( சீற்றம், சாந்தம், கோபம் )
3. **"மைத்துனன்"** என்பதன் எதிர்ப்பால். ( மைத்துனி, மனைவி, புதல்வி)
4. இது ஒரு **கருவி.** ( அரம், அறம், மரம் )
5. **கடல்** என்பதன் மற்றொரு சொல். ( பறவை, பரவை, ஆறு )
6. **"இது"** என்பதன் பன்மைச் சொல். ( அது, அவை ,இவை )
7. **"உயரமான சிகரம் எவரெஸ்ட் "** என்பதிலுள்ள அடைமொழி. ( எவரெஸ்ட் , உயரமான, சிகரம் )
8. **"குவளைகள்"** என்பது. ( பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் )
9. **"பாத்திமா"** என்பது. ( தன்மை, முன்னிலை, படர்க்கை )
10. "**அவன் போகமாட்டான்**" எனும் வாக்கியம் காட்டும் காலம்.

    ( நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் )

02). **அடைப்பினுள் உள்ள வாக்கியத்தை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**வெள்ளைப் புறாக்கள் நீல வானில் நேர்த்தியுடன் பறந்ததை சிறுவர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.**

1. **வாக்கியத்திலுள்ள அடை மொழிச் சொல் ஒன்றை எழுதுக.** :..................................
2. இவ்வாக்கியம் காட்டும் **காலம் எது?.** :..................................
3. இங்கு இடம்பெற்றுள்ள **பலர் பால் பெயர்ச்சொல் எது**? :..................................
4. **வினைச்சொல்லைத்** தெரிவு செய்து எழுதுக. :..................................
5. இங்கு இடம்பெற்றுள்ள **நிறுத்தற்குறியின்** பெயரை எழுதுக. :..................................
6. **அஃறிணைப் பன்மைச் சொல் எது** ? : ..................................

02). **அட்டவணையில் உள்ள விபரங்களுக்கேற்ப சொற்களை வகைப்படுத்தி எழுதுக.**

| சொற்கள் | குணப்பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|
| **சிரித்தல் , புளிப்பு ,** | 1. | 1. |
| **முக்கோணம், பறித்தல்** | 2. | 2. |
| **வருதல், ஊதா** | 3. | 3. |

03). **அடைப்புக்குள் உள்ள சரியான சொல்லினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. ………. பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான். ( **உலவு, உழவு, உளவு)**

2. அவன் எய்த …………பட்டு மான் கீழே விழுந்தது. ( **பாணம்,பானம், பாநம்)**

3. மாடிப்படியிலிருந்து கீழே …………. **(இறங்கினர், இரங்கினர், ஏறினர்)**

4. புத்தகக் கட்டுக்கள் …………. **(சறிந்தன, சரிந்தன, உடைந்தன)**

5. ஒவ்வொரு ……….. சிந்திக்க வேண்டும். ( **மனிதர்களும், மனிதரும், மநிதரும்)**

04). **ஒத்த சொல்லுடன் இணைக்குக.**

| | |
|---|---|
| 1. அல்லல், இடர், இன்னல் | கோபம் |
| 2. மதி, திங்கள், நிலா | அழகு |
| 3. சினம், சீற்றம், வெகுளி | சூரியன் |
| 4. வனப்பு, எழில், கவின் | சந்திரன் |
| 5. ஞாயிறு, கதிரவன், பரிதி | துன்பம் |

04). **எதிர்ப்பாற் சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்.**



| | | | | |
|---|---|---|---|---|
| | புத்திரன் | ஓடினான் | சீமான் | |
| இளைஞன் | | புண்ணியவதி | பேர்த்தி | |
| நங்கை | பாங்கி | பெரியவள் | | தபுதாரன் |



1. விதவை : ……………………………… 2. யுவதி : ……………………………………..

3. பாங்கன் : ……………………………… 4. நம்பி : ……………………………………..

5. சீமாட்டி : ……………………………… 6. பேரன் : ……………………………………..

7. புண்ணியவான் : ………………………… 8. புத்திரி : ……………………………………..

9. பெரியவன் : ………………………………10. ஓடினாள் : ……………………………………..

05). **தரப்பட்டுள்ள ஒருமை வாக்கியங்களை** பன்மை **மாற்றி எழுதுக.**

1. மரம் முறிந்து விழுந்தது. :………………………………………………………..
2. நட்சத்திரம் வானில் மின்னியது. : ………………………………………………........
3. அவன் ஓடி விளையாடினான் : ……………………………………………………….

**06). கீழ்வரும் பந்தியிலுள்ள அடைமொழிகளைத் தெரிவு செய்து எழுதுக.**

சிவந்த வானத்திலே வெள்ளை நிலா வெளிவர எட்டிப்பார்க்கும் நேரம். சின்னத் தம்பியுடன் சிரித்துப்பேசி மகிழ்ந்த நான், பட்டு மணலில் கால் வைத்து மெதுவாக நடக்கின்றேன். குடுகுடென தம்பியும் பின்னால் துள்ளித்துள்ளி ஓடி வந்தான்.

1. ……………….. 2. ……………….. 3……………….. 4. …………….. 5………………..

**07). கீழ்வரும் ஒலி வேறுபாட்டுச் சொற்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை எழுதுக.**

1. இரங்கினர் : ……………………………………………………………………………
   இறங்கினர் : ……………………………………………………………………………
2. இரை :……………………………………………………………………………
   இறை : ……………………………………………………………………………

***08). சொற்புதிர் சட்டகத்தினை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.***

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | லை | ம | றை | கா | ய் | அ | ழு | த | லை |
| ந் | ம | டி | த் | த | ல் | ய் | போ | க | வ |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் | கி | வ | ட் |
| யா | ழ் | ப் | பா | ண | ம் | ம | ற | ல் | ட |
| வ | ரு | கி | ன் | றா | ன் | பு | து | மை | ம் |

1.இடப்பெயர்ச்சொல் - :…………………….. 2. பொருட்பெயர்ச்சொல் - :………………………..

3.நிகழ்கால வினைச் சொல் - :……………… 4. சினைப்பெயர் - :………………………………...

5.குணப்பெயர்ச்சொல் - :…………………… 6. தொழிற்பெயர்ச்சொல்- :……………………………

**09). கட்டத்திலுள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக**.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **ன** | **ண** | **ல** | **ள** | **ழ** | **ர** | **ற** |

1. வெல்.......ம் 2. உ.......வகம் 3. வி…....ங்கு 4. ப.......க்கம்
5. பள்......ம் 6. உ......க்கம் 7. இ.......க்கம் 8. விமா......ம்
9. ப…...கைகள் 10 க…..ங்கள்

**10). பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**
.
1. “நண்பர்கள்” உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)
2. “புத்தகம்” அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)
3. “தாதி” உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)
4. “மரங்கள்” அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)

**11). வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**


1. பூந்தோட்டத்தில் மல்லிகைப்பூ ............................................................(மலர்ந்தது, மலர்ந்தன)
2. நானும் எனது தங்கையும் பாடசாலைக்குச் ...................................... (சென்றேன், சென்றோம்)
3. கழிவுநீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் .............................................(பெருகுகின்றது, பெருகுகின்றது)
4. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் ...............................................(போன்றது, போன்றன)

**12). கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் குழந்தையின் சிரிப்பை இரசித்தேன்.
   ........................................................................................................................
2. மான்கள் ஓடிச் சென்றன.
   ........................................................................................................................
3. உழவர்கள் வயலில் வேலை செய்தனர்.
   ........................................................................................................................

**13). தரம் ஐந்து தமிழ் பாடநூல் தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்கு அடைப்பிற்குள் தரப்பட்டுள்ள பாடத்தலைப்புக்களின் துணையுடன் விடை எழுதுக.**

1. "**மாட்சி**" என்ற சொல்லின் ஒத்த சொல் **(பவனி வரும் நிலா)** - :.....................
2. கடிகாரப் பறவைகள் எவை? **(காலைக் காட்சி)** - :1..................... 2. .....................
3. சின்னத்தம்பிப் புலவரின் தந்தை யார்? **(சின்னத்தம்பிப் புலவர்)** -:...................................
4. இக்கதையின் மூலம் நீங்கள் பெற்ற படிப்பினை யாது?. **(அந்தரேயின் குதிரைப் படைகள்)**
   ..................................................................................................



**16).** கீழுள்ள காட்சிப்படத்தினை நன்கு அவதானித்து இடம்பெறும் விடயங்களைக் கொண்டு ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு குறையாமல்** சரியான எழுவாய் பயனிலைகளுடன் நிகழ்காலத்தில் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக.

1..........................................................................................................

2..........................................................................................................

3..........................................................................................................

..................................................................................................................

# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்

**Corona special project**

## முதலாம் தவணை செயலட்டை -2020

# தமிழ் மொழி - 02

தரம் 5

புள்ளிகள் -

நேரம் :1 $\frac{1}{2}$ மணித்தியாலம்

மாணவர் பெயர்:................................................................................................

**01).** **பின்வரும் உரையாடலை நன்றாக வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைகளை உறுப்பமைய எழுதுக.**

**தாத்தா** :ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்.

**பேரன்** : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா?

**தாத்தா** :காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால், ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்.

**பேரன்** :ஏன் தாத்தா?

**தாத்தா** :சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள். இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்.

**பேரன்** :புரியும்படி சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா** :சாய்லூனுக்கு முன்பே காகிதத்தை யாராவது அரைகுறையாகக் கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் பரவலாக இன்று பயன்படுத்தப்படும் காகிதத் தயாரிப்பு வழிமுறைகளை முதலில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் சாய்லூன் அவர்களே.

1. உரையாடலிலுள்ள **இடப்பெயர்ச் சொல்** ஒன்றை எழுதுக. :....................................
2. இவ்வுரையாடல் **யார், யாருக்கிடையில்** இடம்பெறுகிறது? :....................................
3. இங்கு இடம்பெற்றுள்ள **பலர் பால் பெயர்ச்சொல் எது**? :....................................
4. **வினைச்சொல் ஒன்றைத்** தெரிவு செய்து எழுதுக. :....................................
5. இடம்பெற்றுள்ள **நிறுத்தற்குறியொன்றின்** பெயரை எழுதுக. :....................................
6. **அ∴றிணைப் ஒருமைப்** பெயர்ச் சொல் எது ? : ....................................
7. **“பேர்த்தி”** என்பதன் எதிர்ப்பாற்சொல் எது? :....................................
8. “**கடினம்**” என்பதன் ஒத்த பதத்தினை எழுதுக. :....................................
9. “**கடைசியில்**” என்பதன் எதிர்ப்பதத்தினை எழுதுக. :....................................
10. **“தயாரித்திருக்கின்றார்கள்”** என்பதைப் பிரித்து எழுதுக ? : ....................................

**02). பாடலைப் பூர்த்தி செய்க.**

மீனினம் ஓடிப் ………………….. -ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் ………………

**03). கீழ்வரும் ஒலி வேறுபாட்டுச் சொற்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை எழுதுக.**

1. கூறியது : ……………………………………………………………………………

   கூரியது : ……………………………………………………………………………

2. தெரி : ……………………………………………………………………………..

   தெறி : ……………………………………………………………………………..

**04). கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**( நாங்கள், கட்டில் , சித்தப்பா, பறவைகள், எனது, சிறுவர்கள்,)**

1. உயர்திணைப் பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல் : ……………………………….
2. உயர்திணை ஒருமைத் தன்மைப் பெயர்ச் சொல் : ……………………………….
3. அஃறினைப் பன்மைப் பெயர்ச் சொல் : ……………………………….

**05). பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக**

1. கொக்கு மீனைக் கொத்தியது. :……………………………………………………………
2. குடை உடைந்தது. :……………………………………………………………
3. தாமரை மலர்ந்தது. : ……………………………………………………………
4. தொப்பி அணிந்து வாருங்கள். : ……………………………………………………………
5. பென்சில் இருந்தது. :……………………………………………………………

**06). கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியங்களை, இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நாம் அழகிய காட்சிகளை பார்ப்போம்.

   ……………………………………………………………………………………

2. நான் சந்தைக்குச் செல்வேன்.

   ……………………………………………………………………………………

3. அவை நீரில் நீந்தும்.

   ……………………………………………………………………………………

4. நாங்கள் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடுவோம்.

   ……………………………………………………………………………………

**07). அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.**

1. சூரியனது ........................... எங்கும் பரவியது. ( ஒலி, ஒளி, ஒழி )
2. நீடூழி காலம் .................................. ( வாள்க, வாழ்க, வால் )
3. இப்பூமியைச்செ சுற்றி ..............................மண்டலம் உள்ளது. ( வலி, வளி, வழி )
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த .................... ஆகும். ( பனி, பணி, பநி )

**08).பின்வரும் ஆண்பால் வாக்கியங்களைப் பெண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. பேரரசன் அந்தப்புரத்தில் இருந்தாள்.

.........................................................................................................................

2. மருத்துவன் வைத்தியம் அளித்தான்.

.........................................................................................................................

**09). ஒத்த கருத்து, எதிர்க்கருத்துச் சொற்சோடிகளை இணங்கண்டு பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பரி, | இடர், | குதிரை, | நண்பன், | துன்பம் |
| 2. | ஆக்கம் , | தெரு, | பரிதி, | அழிவு, | பாதை |
| 3. | ஆகாரம், | மாட்சி, | பெருமை, | அமைதி, | ஆரவாரம் |
| 4. | மாற்றான், | ஈகை, | பகைவன், | இம்மை, | மறுமை |
| 5. | செவி, | சிரசு, | தலை, | கை, | கால் |

**10). அட்டவணையிலுள்ள சொற்களை உயர்திணை, அ∴றிணை என வகைப்படுத்தி எழுதுக.**

| **சொற்கள்** | **உயர்திணை** | **அ∴றிணை** |
|---|---|---|
| **ஜனாதிபதி , தேனீ, காடு, குறவர், குழந்தை , குதிரை** | 1. | 1. |
| | 2. | 2. |
| | 3. | 3. |

**11). முதலெழுத்துக்களின் துணையுடன் இருபாற் பொதுப் பெயர்களை எழுதுக.**

**1. வி.......................... 2. மே............. 3.அ.........................**

**4. நீ.......................... 5. பு................ 6.கு..........................**

**12) .பின்வரும் பாடநூல் பாடங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சின்னஞ்சிறு வில்லாய் இருந்து பிறகு **குடம்போல** மாறுவது எது? : ..............................
2. **"அளவளாவுதல்"** என்பதன் கருத்தினை எழுதுக. : ..............................
3. பாட்டி முட்டை விற்பது எங்கே? : ..............................
4. சோமசுந்தரப்புலவர் யாழ்ப்பாணத்தில் எந்த ஊரில் பிறந்தார்? :..................................

**13) . கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுங்கள்.**

1. புயற்காற்று ஊ.....ஊ... என இரைந்தது
2. அவர் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது
3. அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.
4. மரஞ் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன

**14). கீழே தரப்பட்டுள்ள நகைச்சுவைக் கதைப்படத்தை நன்றாக அவதானித்து ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் சரியான எழுவாய் பயனிலைகளுடன் நான்கு வாக்கியங்களில் கதையினை எழுதுக.**



1.............................................................................................................

2.............................................................................................................

3.............................................................................................................

4.............................................................................................................

.........................................................................................................................

# மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்

**Corona special project**

## முதலாம் தவணை செயலட்டை -2020

தரம் **5**

# தமிழ் மொழி - 03

**புள்ளிகள் -**

*நேரம் :1 $\frac{1}{2}$ மணித்தியாலம்*

*மாணவர் பெயர்:*.........................................................................................

**01). அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பந்தியிலுள்ள இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| **இரை,** | **போய் விட்டது,** | **இங்கிலாந்தின்,** | **நின்றன,** | **வாத்து ,** |
| **தாயைப் போன்று,** | **அரவணைத்துக்,** | **குஞ்சுகளும் ,** | **தவித்த ,** | **தாய்** |

.......................... ஸ்டான்ஸ்டட் கோட்டையில் ஒரு ............. ஒன்பது குஞ்சுகளைப் பொரித்தது. வாத்தும் குஞ்சுகளும் ............... தேடி சுற்றித் திரிந்ததை அங்கிருந்த நாய் ஒன்று கவனித்து வந்தது. திடீரென்று ........................வாத்து காணாமல் ........................... நரி தூக்கிச் சென்றுவிட்டது. தாய் இன்றித் ...................... வாத்துக் குஞ்சுகளை நாய் ...................................... கொண்டது. நாய் செல்லும் இடமெல்லாம் ................................... கூடவே சென்றன. நாயின் தலை மீது ஏறி ..................... நாயின் முதுகில் வரிசையாக அமர்ந்துகொண்டு வலம் வந்தன. நாயின் மீது ஏறி விளையாடின. தாய் வாத்து இல்லாததை அறிந்து, குஞ்சுகளை ஒரு ..........................................அக்கறையாக ,பொறுமையாக நாய் கவனித்தது.

**02). அடைப்பினுள் தரப்பட்டுள்ள பின்வரும் நிறுத்தக்குறிகளைப் பந்தியில் தரப்பட்டுள்ள கட்டங்களில் பொருத்தமுற இடுக.**

முற்றுப் புள்ளி ( **.** ) காற்புள்ளி ( **,** ) வினாக்குறி ( **?** ) மேற்கோற்குறி ( **“ ”** )

உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல சம்பவங்கள் நிகழ்கின்றன☐ எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை☐ ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்☐ அவற்றை எப்படி அறிந்து கொள்கின்றோம்☐ பத்திரிகை☐ வானொலி☐ தொலைக்காட்சி☐ இணையம் போன்றவற்றின் ஊடாக அறிந்து கொள்கின்றோம்☐ எனவே☐ ☐ கண்டது கற்கப் பண்டிதனாவான்☐ எனும் பொன்மொழிக்கேற்ப நாமும் பல்வேறு தகவல்களையும் தேடி அறிய முற்படவேண்டும்☐

**03). கீழ்வரும் ஒலி வேறுபாட்டுச் சொற்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை எழுதுக.**

1. கனி : ........................................................................................

   கணி : ........................................................................................

2. எரிப்பு : ........................................................................................

   எறிப்பு : ........................................................................................

**04). அட்டவணைக்கேற்ப கீழுள்ள சொற்களை வகைப்படுத்தி எழுதுக**

**தந்தைமார், மணமகன், புதல்வி, குவளை, புனிதர்கள், அவன், பாற்காரி, கால்கள், வாணி, தடி, பண்டிதர், முட்டை, பாத்திமா, குரங்கு, குறவர்கள், புலிகள், தோழர்கள், நிபுணர்கள், குஞ்சுகள், பிரியன்,**

| ஆண்பால் ஒருமை | பெண்பால் ஒருமை | ஒன்றன் பால் ஒருமை | பலவின் பால் பன்மை | பலர்பால் பன்மை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**05). பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. "**கலப்பை** " என்பதன் ஒத்தகருத்துக் சொல்லை எழுதுக. :……………………………..
2. "**பெருமை**" என்பதன் எதிர்க்கருத்துக் சொல்லை எழுதுக. :……………………………..
3. "**மைத்துனன்**" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக. :…………………………….
4. "**உவகை**" என்பதன் ஒத்தகருத்துக் சொல்லை எழுதுக. :…………………………….
5. "**சேவகி**" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக. :…………………………….
6. "**காட்டுக்கோழிகள்**" என்பதன் ஒன்றன்பாற் சொல்லை எழுதுக. :…………………………..….
7. "**நீங்கள்**" என்பதன் தன்மை ஒருமைச் சொல்லை எழுதுக. :…………………………...
8. ( **"……"** ) இந்நிறுத்தற் குறியின் பெயரை எழுதுக. :……..…………….……….
9. "**பாடகன்**" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக. :…………………………….
10. "**அவை**" என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. :…………………………….

**06). பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1. யானைக் கூட்டம் நீர் அருந்தியது. (..................)
2. புத்தகங்கள் மேசையின் மீதுள்ளன. (..................)
3. கழிவு நீர் தேங்கி நிற்பதனால் நுளம்புகள் பெருகுகின்றது. (…………..)
4. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் சென்றேன். (…………..)
5. வானில் பல வர்ணங்கள் நிறைந்திருந்தது. (…………..)

**07).** **முதலில் தரப்பட்டுள்ள சொல்லின் கருத்தை ஒத்திராத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. **மதி** – ( சந்திரன், சூரியன், நிலா, அறிவு )
2. **உரம்**– ( ஊக்கம், கடினம் , எரு, வலிமை )
3. **உறுதி** – ( கவலை, சத்தியம், வலிமை, மேம்பாடு )
4. **வடு** – ( குற்றம், தழும்பு, மாம்பிஞ்சு, கூர்மை )
5. **நகை** – ( தங்கம், சிரிப்பு , ஆபரணம், இகழ்ச்சி )

**08).** **கீழே தரப்பட்டுள்ள பன்மை வாக்கியங்களைப் ஒருமை வாக்கியங்களாக மாற்றி எழுத வழிப்படுத்துங்கள்.**

1. மாணவிகள் கோலங்கள் இட்டனர்.

   ..............................................................................................................

2. வரிக்குதிரைகள் வேகமாக ஓடும்.

   ..............................................................................................................

3. விளையாட்டுக் கழகங்கள் விளையாடுகின்றன.

   ..............................................................................................................

4. இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

   ..............................................................................................................

**09).** **கீழே தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் புதிரினைப் பூரணப்படுத்துக.**

**இடமிருந்துவலம்**

**1.சத்தத்தின் ஒத்த சொல்**
**2.பயிர்களிடையே வளர்வது**
**3.கடலிலே எழுவது**
**4.தென்னையின் பூந்தண்டு**
**5.சேவல் கூவும்**
**7.உயரம் ஏற உதவுவது**
**8.குதிரைக்கு இன்னொரு சொல்**

**மேலிருந்து கீழ்**

**1.வெளிச்சம் என்றும் கூறலாம்**
**2.இதில் ஆர்வம் ஏற்பட வேண்டும்**
**3.தயிர் என்பதன் ஒத்த பதம்**
**4.மணலும் மணல் சார்ந்த இடமும்**
**5.மாட்டின் ஆண் மரபு**
**6.சுவரில் அறைவது**
**7.நீர் நிலைகளில் ஒன்று**

| | | | | |
|---|---|---|---|---|
| 1.ஒ | …… | | 2.க | ……. |
| …… | | 3.அ | …… | |
| | 4.பா | …… | | 6.ஆ |
| 5.கா | …… | | 7……. | …… |
| …… | | 8. ப | ……. | |

**10)**. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் எழுவாய் ,பயனிலை, செயற்படு பொருள் ஆகியவற்றை எழுதுக.**

1. **அதீக் புத்தகம் வாசித்தான்.**

எழுவாய் : ……………..... . பயனிலை :……………… செயற்படு பொருள் :…………..............

2. **தோட்டத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்தன**.

எழுவாய் : ……………..... . பயனிலை :……………… செயற்படு பொருள் :…………..............

3. **காற்றினால் மரங்கள் முறிந்து விழுந்தன.**

எழுவாய் : ……………..... . பயனிலை :……………… செயற்படு பொருள் :…………..............

**11)**. **கீழ்வரும் சுயவிபரக்கோவையை பூர்த்தி செய்க.**

1. முழுப்பெயர் : ……………………………………………………………………..
2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………………………………………….
3. பிறந்த திகதி : ஆண்டு …………….. மாதம் ………………. திகதி ………………
4. வீட்டு விலாசம் : ………………………………………………………………
5. கற்கும் தரம் : …………………………………………………………………
6. கற்கும் பாடசாலையின் பெயர் : ……………………………………………….
7. தந்தையின் பெயர் : ……………………………………………………………
8. தாயின் பெயர் : …………………………………………………………………
9. தாயின் தொழில் : ………………………………………………………………
10. தந்தையின் தொழில் :……………………………………………………………
11. சகோதர,சகோதரர்களின் எண்ணிக்கை : …………………………………..…..
12. தொலைபேசி இலக்கம் : ………………………………………………………
13. திகதி……………………… 14. ஒப்பம் : ………………..

**12)**. **உமது சூழலை அவதானித்து ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் சரியான எழுவாய் பயனிலைகளுடன் நிகழ்காலத்தில் நான்கு வாக்கியங்கள் எழுதுக.**

1.…………………………………………………………………………………

2.…………………………………………………………………………………

3.…………………………………………………………………………………

4.…………………………………………………………………………………

………………………………………………………………………………………………